முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 639**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

29.06.2021, செவ்வாய்கிழமை

1. கலிவெல்ல பிறந்த மாதவசியே
   கருணையாக வந்த மகா ஞானியே
   அழியாமை என்பால் பெற்றுவந்த
   அரங்கனே ஆறுமுக ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   ஞானிகளின் பூஜை செய்து உலகோர்க்கு
   ஞானிகள் ஆக உண்டான வாய்ப்பு தந்து அருளுகின்ற
3. அரங்கனே உந்தன் தர்மம் உலகை வெல்லும்
   அரங்கனே உந்தன் கொள்கை இந்த உலகை ஆளும்
   வரங்கள் பெற்று என்பால் என் சக்தியாக
   வையகத்தை வலம் வருகின்ற ஞானியே
4. ஞானியே உந்தன் தொண்டர் படை மூலமே
   ஞானமெங்கும் பரப்பி ஆறுமுகன் யான்
   உலகோரை ஞானிகளாக்கி மகிழ்விப்பேன்
   உயர்வான உலகமாற்றம் செய்தும் அருள்புரிவேன்
5. அருளவே அரங்கன் உன் அறம் உலகை மாற்றும்
   ஆற்றல்மிக்க அரங்கன் உன் சன்மார்க்கம் இந்த உலகை தேற்றும்
   இருள் நீக்கி பேரிடர்களையும் நீக்கி
   இந்த கலியுகத்தை அரங்கன் உன் சக்தியே காக்கும்
6. காக்கவே உன்னுள் யானிருக்க
   கருணைபட உன் தீட்சை பெற்ற மக்களுக்கு
   ஆக்கமுடன் அழியாமை உறுதி
   ஆக்கமுடன் அழிவில்லா ஞானமும் உறுதி
7. உறுதி தந்து உலகோர்க்கு உன் சக்தியாக யான்
   உத்தமமாய் பெருந்துணை புரிந்து அருள் புரிய
   கருதியே உன் நாமஜெபத்தோடு
   கட்டாயம் அன்னதான சேவை செய்யும் மக்களெல்லாம்
8. மக்களெல்லாம் மரணமில்லா பெரும்பேறு
   மறுமைவெல்லுகின்ற மகா சக்தியும்
   தேக்கமின்றி பெற்று தேறுவர்
   தேசிகன் உன்னால் ஞானிகளாகி பெருவாழ்வு பெறுவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–